பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 11 | திங்கட்கிழமை | 25.03.2024 | அதிர்வு 237

## மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் இந்த வாரம் அறிவிப்பு?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் இந்த வாரம் பெயரிடப்படுவார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் 06

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில்

# உண்மைகள் தெரிந்தால் தயவு செய்து அதனை உடனே வெளிப்படுத்துங்கள்!

### மைத்திரியிடம் சஜித் வேண்டுகோள்



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மைகள் உங்களுக்குத் தெரிந்தால், தயவு செய்து அதனை உடனே வெளிப்படுத்துங்கள்." - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 131 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அம்பந்தோட்டை, லுனுகம்வெஹர அபயபுர கனிஷ்ட வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06

# தாடியாலும் தலைமுடியாலும் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் இழுத்து திருச்செல்வம் சாதனை







யாழ்ப்பாணம், தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் தனது தாடியாலும் தலைமுடியாலும் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் வரை இழுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு - காலிமுகத்திடலில் இந்தச் சாதனை நிகழ்வு நடைபெற்றது.

1000 மீற்றர் தூரத்துக்கு வாகனத்தைத் தனது தாடியாலும் தலைமுடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே திருச்செல்வத்தின் நோக்கமாக அமைந்தது.

அதற்கமைய 1550 கிலோ கிராம் எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தூரத்துக்குத் தாடியாலும், 500 மீற்றர் தூரம் வரை தலைமுடியாலும் இழுத்து திருச்செல்வம் சாதனை படைத்துள்ளார். 07

# வெகுவிரைவில் சிறை செல்வார் மைத்திரிபால

### அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரைவில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் செல்வார் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் 2015 ஆம் ஆண்டு 06



என் நீண்ட நாள் வாசக நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். உரிமையுடன் கோபித்துக் கொண்டார்.

"தமிழரசு உள்வீட்டுப் பிரச்சினைகளை அக்கு வேறு, ஆணி வேறாக நேரத்துடனேயே பிய்த்து உதறிக் கொண்டிருந்தீர்கள். திடீரென்று அந்த விடயத்தில் சைலண்ட் ஆகிவிட்டீர்கள். ஏதேனும் அண்டர்ஸ்டாண்டிங்கா?" - என்று நேரடியாகவே கேட்டார் அவர்.

"எனக்கா? எனக்கு அண்டர்ஸ்டாண்டிங் உங்களைப் போன்ற வாசகர்களுடன் மட்டும்தான். பிற தரப்புகளுடன் அல்ல" 06

# போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே கந்தக்காட்டுக்கு

இனிவரும் காலங்களில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்று மருத்துவச் சான்றளிக்கப்பட்டவர்கள் மட்டுமே கந்தக்காடு உட்பட ஏனைய புனர்வாழ்வு மையங்களுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று புனர்வாழ்வு ஆணையாளரின் பணியகம் முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்தின் "யுக்திய" திட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்கள் அண்மைய மாதங்களில் அரசால் நடத்தப்படும் கந்தக்காடு உட்பட புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும், இந்த அனுமதிகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதில் போதுமான விளக்கம் கொடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக குற்றவாளிகள், போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்கள் கூட புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இது கடுமையான ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதுடன் மோதல்களைத் தூண்டியுள்ளது.

இந்த மையங்களின் இராணுவப் பணியாளர்களுக்குக் கட்டுப்பாட்டைப் பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில் கந்தக்காடு மோதல்களுக்கு பெயர் போனது என்பதால், பெற்றோர்கள் பாதிக்கப்பட்ட தங்கள் பிள்ளைகளை அங்கு அனுப்புவதற்கு பயப்படுகிறார்கள் என்று மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எனவே, எதிர்காலத்தில் போதைப்பொருள் சார்ந்தவர்கள் அரச மருத்துவ அதிகாரியின் பரிசோதனையின் பின்னரே புனர்வாழ்வு மையங்களுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கம்பஹா – அஸ்கிரிய பிரதேசத்தில் ஆயுதத்தால் தாக்கப்பட்டவர் சாவு!



கம்பஹா – அஸ்கிரிய பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று கம்பஹா தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் துல்கின் அனுராத நவரத்ன என்ற 33 வயதுடையவர், ஒரு பிள்ளையின் தந்தை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரும், கொலை செய்தவரும் நண்பர்கள் எனவும், இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் கொலை இடம்பெற்றுள்ளது என்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூரிய ஆயுதத்தால் தாக்கியவர் எனக் கூறப்படும் சந்தேகநபர் உயிரிழந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் கம்பஹா, பொக்குண வீதி பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் கொடித்தோடை பதப்படுத்தல் நிலையம்

## அக்கராயனில் திறந்து வைப்பு





(த.சுபேசன்)

கிளிநொச்சி – அக்கராயனில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடித்தோடைக் கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் நிலையம் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், கமத்தொழில் அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட உதவி அரச அதிபர், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர் மற்றும் திட்டத்தின் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

85.11 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் 200 பயனாளிகளை உள்ளடக்கியதான இந்த அபிவிருத்திச் செயற்பாடானது இலங்கை அரசு, உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலில் நாடாளுமன்றத் தேர்தலா? மொட்டுக் கட்சிக்குள் போர்க்கொடி



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர் தலை நடத்த வேண்டும் என்று மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ கூறுகின்ற போதிலும் அந்தக் கட்சிக்குள் அதிகமானவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் உடன் பாடில்லை என்று அறியமுடிகின்றது.

அதற்குக் காரணம் அடுத்த முறை நாடாளுமன்றத் தேர் தலில் அக்கட்சியைச் சேர்ந்த பலர் தோல்வியடையப் போவது நிச்சயம். அப்படி தோல்வியடைந்தால் பலரது "பென்ஷன்" கூட இல்லாமல்போகும். அவர்களது பென்ஷனையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் நாடாளுமன்ற ஆயுட் காலம் முடிவடைந்த பின்பே நாடாளுமன்றத் தேர் தல் நடத்தப்பட வேண்டும்.

இதனால், அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை நடத் தாது ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்துமாறு ஜனாதி பதிக்குத் தூது அனுப்பி வருகின்றார்கள் என்றும் தெரிய வருகின்றது.

# வடக்கில் 70 வீதமான வன்புணர்வுகள் சிறுமிகளின் சம்மதத்துடனே என்று பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு பொலிஸ் முறைப் பாடுகளின் பிரகாரம் பதிவான வன்புணர்வுகளில் 70 சதவீத மானவை பாதிக்கப்பட்ட சிறுமிகளின் சம்மதத்துடனேயே இடம் பெற்றுள்ளன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பொலிஸ் திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்கள், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்னவால் வழங்கப்பட்டுள்ளன. அதிலேயே மேற்படி விடயம் தெரியவந் துள்ளது.

வடக்கில் 131 வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 90 சம்பவங்கள் சிறுமிகளின் இணக்கத்துடன் இடம்பெற்றுள்ளன. 33 சம்பவங்கள் மாத்திரமே அவர்க ளின் இணக்கமில்லாது நடந்துள்ளன.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 143 சந்தேகநபர் கள் கைதாகியுள்ளனர்.

# வெள்ளவத்தை பிரபல ஆடையகத்தில் பாரிய தீ விபத்து பணியாளர்கள், பொதுமக்கள் அவசரமாக வெளியேற்றம்







கொழும்பு – வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிரபல தனியார் ஆடையகத்தில் பாரிய தீ விபத்து நேற்று மாலை ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு நின்ற பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

தீயணைப்பு பணிகளில் பல தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து காலி வீதியின் ஒரு பக்கம் மூடப்பட்டிருந்தது.




# திருகோணமலையில் தீர்த்தோற்சவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது அம்பாள் ஆலயத்தில் இருந்து புராதன சிம்ம வாகனத்தில் சமுத்திரக்கரைக்கு சூரியோதயத்தில் எழுந்தருள பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் புடை சூழ தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.









# சுயாட்சி, மாகாணசபை ஆட்சிமுறை இரண்டையும் வலியுறுத்தும் ரெலோ

## தேசிய மாநாட்டுப் பிரகடனத்தில் தெரிவிப்பு

(கே.வசந்தன்)

தமிழர் தாயகத்தில், தம்மைத்தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதுடன், தனித் துவமான இன அடையாளத்தையும், தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்திய இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாண சபை ஆட்சி முறைமையை நடைமுறைப்படுத்த தொடர் அழுத்தம் கொடுப்பது என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தனது தேசிய மாநாட்டுப் பிரகடனத்தில் அறிவித்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 11 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இதன்போது இயக்கத்தின் மாநாட்டுப் பிரகடனத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அந்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

எமது மக்களின் நீண்ட கால அரசி யல் அபிலாசைகளான வடக்கு – கிழக்கு இணைந்த, தமிழர் தாயகத்தில், தம் மைத்தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பினை உருவாக்கு வதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பது என்றும், இந்த இலக்கை அடைவதற் கான நிரந்தர பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அந்தப் பொறிமுறையை இந்தியாவினுடைய மேற்பார்வையிலும் சர்வதேச நாடுகளின் பங்களிப்போடும் ஐ.நாவின் வழிநடத்தலோடும் புலம் பெயர் உறவுகளின் ஒருங் கிணைப்போடும் உருவாக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது.

அத்துடன், எமது தாயகப் பிரதே சத்தை எமது பாரம்பரிய வதிவிடமாகவும், எமது தனித்துவமான இன அடையா ளத்தையும், தமிழ் மொழிக்கான அங்




கீகாரத்தையும் உறுதிப்படுத்திய இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தங் களோடு உருவாக்கப்பட்ட மாகாணசபை ஆட்சி முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோகிப்பதற் கான நடவடிக்கைகளை செயற்ப டுத்தல்.

எமது இனத்திற்கு எதிராக இழைக் கப்பட்ட இனப்படுகொலை உட்பட மனித உரிமை மீறல்கள், யுத்த குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்க ளால் பாதிக்கப்பட்ட நீதி கோரி நிற்கும் எமது உறவுகளுக்கான நீதியைப் பெற் றுக்கொடுக்க சர்வதேச நீதிப் பொறி முறைக்காக தொடர்ந்தும் பாடுபடுவோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியை கோரி நிற்கும் எம் மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக் கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வது.

அரச இயந்திரங்களினால் எமது தாயக பிரதேசத்தில் தொடர்ந்து அபக ரிக்கப்பட்ட வந்த காணிகளை விடுவிப் பதற்கும், தொடர்ச்சியாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பின் விளைவாக எமது வழி பாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதாலும், பௌத்த சின்னங்களை நிறுவுவதன் ஊடாகவும் நமது மக்களின் வாழ்வாதா ரத்தையும் இனக்குடிப் பரம்பலையும் சிதைத்து, நமது சுயநிர்ணய உரிமைக் கான தகுதியை கேள்விக்குறி ஆக்க முயலும் செயல்பாடுகளுக்கு எதிரான சகல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

நமது இனக் குடிப்பரம்பலின் செறி வைப் பேண எமது எதிர்கால சந்ததிக் கான வளமான வாழ்வை உறுதிப்படுத்தி அதனூடாக எமது இனத்தின் இருப்பை தக்க வைக்க, எமது தாயக பூமியில் பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி அதை செயல் படுத்த உரியவேலைத்திட்டங்களை மேற்கொள்வது.

எமது இனத்தின் கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்ப தற்கும் செழுமைப் படுத்தவும் வேலை திட்டங்களை முன்னெடுப்பதுடன் நமது மக்கள் நலன் சார்ந்து பிராந்திய அரசியல் உறவை வலுப்படுத்தவும், சர்வதேச நாடுகளின் ஆதரவை திரட்டவும் அதற்கான பூகோள அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும்.

மேற்கூறிய எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாசைகளையும் உரிமையையும் வென்றெடுப்பதற்கு தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் உட்பட எமது தேசியத்தை நேசிக்கும் அனைத்து தமிழ் தரப்பினரையும் ஒன்றிணைத்து புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேசமாக எமது இனத்தை கட்டி எழுப்பும் பணியில் முழு முயற்சி யோடு ஈடுபடுவது என்றும் இந்த மாநாட் டில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பிரகடனப் படுத்தி நிற்கிறது. – எனத் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று பதிலளித்தேன்.

"தமிழரசு விடயம் நீதிமன்றத்தில் நிற்கின்றது. தனிப்பட்ட சிலரின் சமரச முயற்சிகள் வேறு பக்கத்தில் தொடர்கின்றன என்றும் அறிவேன். அவற்றைப் புதினமாக்கி ஏன் அந்த முயற்சிகளைக் குழப்ப வேண்டும் என்று விட்டுவிட்டேன்" – என்றும் விளக்கினேன்.

"அப்படியானால் நீதிமன்ற விடயங்களையாவது கொஞ்சம் புகுந்து என்ன நிலைமையில் இருக்கின்றது என்று எழுதுங்களேன்!" என்று அன்புக் கட்டளையிட்டார் அவர்.

நியாயமான கோரிக்கையாக இருந்தது. தேடிப் பார்த்தேன்.

ஏற்கனவே திருகோணமலை வழக்கில், கட்சிப் பிரமுகர்களான முன்னாள் தலைவரிலிருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் வரை எல்லோரும் வழக்காளியின் கோரிக்கையை ஏற்று, யாப்பின்படி கட்சி செயற்படவில்லை என்று ஒப்புக்கொண்டு, எழுதிக் கொடுத்துவிட்டும் வந்து விட்டார்கள். ஆக ஒரேயொரு எதிராளியான சுமந்திரன் மட்டுமே இன்னும் பதில் கூறவில்லை. நீதிமன்றுக்கு என்ன பதில் கூறப் போகின்றீர்கள் என்று கேட்டால் அவர் விளக்கமாகப் பதில் சொல்கின்றார் இல்லை. ஏதோ ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று தெரிகின்றது. ஆனால் அதைக் கூற அவர் விரும்புகின்றார் இல்லை என்பதை அவரிடமே கேட்டு, பதில் கிடைக்கவில்லை என்று தெளிவாக எழுதி விட்டேன்.

சரி. மீண்டும் ஒரு தடவை கேட்டுப் பார்ப்போம் என்று நேற்று தொடர்பு கொண்டேன். அவரின் பதில் யுத்த காலத்தில் நாம் அடிக்கடி பேசிய ஒரு வசனத்தின் பாணியில் இருந்தது.

'கிட்ட வரட்டும். திட்டம் இருக்கு' என்ற அந்த வசனத்தின் தாற்பரியம் நம்மில் பலருக்கு புரியும்.

அதே பாணியில் "வழக்குத் தவணை வரட்டும். அப்போது பார்க்கலாம். உங்கள் செய்தியாளரை வழக்குக்கு அனுப்புங்கள். தெரியவரும்." – என்று பீடிகை போட்டார் சுமந்திரன்.

இனி அவரின் வாயிலிருந்து விடயத்தை பிடுங்குவது கஷ்டம் என்று தெரிந்தது. சட்டத்தரணி நாக்கு சாகசம் பண்ணும். அதை நம்பிப் பயனில்லை. அதனால் வெளியில் தேடத் தொடங்கினேன்.

அண்மையில் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுக் கூட்டத்தில் இந்த வழக்கு விடயம் நீள, அகலமாக – விரிவாக – பேசப்பட்டிருப்பதை அறிய முடிந்தது.

வழக்கின் கடந்த தவணையின் போது, வழக்கை நேரத்துடன் முடிக்கலாம் என்ற நப்பாசையில், வழக்காளியின் எல்லாக் கோரிக்கைகளையும் – குற்றச்சாட்டுகளையும் – ஏற்றுக் கொள்ளும் விதத்தில் கட்சிப் பிரதிநிதிகள் ஒன்றாக முடிவெடுத்துச் செயற்பட்டமை அல்லது குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டமை மிக மோசமான தவறு என்று குறிப்பிட்டு அதன் விளைவுகளை வவுனியாக் கூட்டத்தில் விளக்கியிருக்கின்றார் சுமந்திரன். கட்சி யாப்புப்படி செயற்படவில்லை என்ற விடயத்தில், நீதிமன்றப் பதிலாக தவறை ஏற்று ஒப்புக்கொண்டமை வரலாற்றுப் பிழை என்று சுமந்திரன் விவரித்திருக்கின்றார். அப்போதுதான் தாங்கள் அவசரப்பட்டு எத்தகைய தவறை இழைத்திருக்கின்றோம் என்ற விபரீதம் கட்சியின் ஏனைய தலைவர்களுக்கு விளக்கமாக – விவரமாக – புரிந்திருக்கின்றது.

அடுத்து என்ன செய்வதென்று ஆராய்ந்து இருக்கின்றனர்.

எதிராளிகளில் சுமந்திரன் மட்டுமே இன்னும் வழக்காளியின் குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றுக்குப் பதில் தெரிவிக்காமல் இருக்கிறார்.

அவரே அதனைப் பயன்படுத்தி, கட்சியின் நிலைமையைக் காப்பாற்றும் விதத்திலான நிலைப்பாட்டை எடுத்து, வழக்காளியுடன் சட்டப் போர் நடத்தியோ அல்லது வேறு வழியிலோ கட்சியின் நிலையை காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அதற்கு வாக்குறுதி அளித்து விடயத்தை பொறுப்பேற்றிருக்கின்றார் சுமந்திரன்.

அதை எப்படி செய்யப் போகின்றார் – என்ன நிலைப்பாடு எடுத்துச் சமாளிக்கப் போகின்றார் – கட்சியின் ஏனைய தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதியை எப்படி நிறைவேற்ற போகின்றார் ? என்பவை தெரியவில்லை. கேட்டாலும் பதிலைக் கோடி காட்டக் கூட அவர் தயார் இல்லை.

'கிட்ட வரட்டும் திட்டம் இருக்கிறது' என்று காத்திருக்கின்றாரோ என்னவோ...?

ஏப்ரல் ஐந்தாம் தேதி வழக்குத் தவணையின் போதுதான் நிலைமை தெரிய வரும்.

எது, எப்படி என்றாலும், வழக்காளியின் கோரிக்கைக்கு இணங்காமல் அவற்றை முறியடிப்பதற்கான சட்டப் போராட்டத்தை எதிர்கொள்வதற்கு – கட்சியின் ஏனைய தலைவர்களுக்குத் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு – சுமந்திரனுக்குக்கால அவகாசம் கட்டாயம் தேவைப்படும். அது வரை வழக்கு இழுபடுவது தவிர்க்க முடியாததாகத் தான் இருக்கும்.

## வெகுவிரைவில் சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரசைத் தோற்றுவித்தார்கள். நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் மத்திய வங்கியை மோசடி செய்து, பொருளாதாரப் பாதிப்புக்கு வித்திட்டது.

நல்லாட்சி அரசின் அரச தலைவர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியால் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்பின் பலவீனத்தை அடிப்படைவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரதூரமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர் யார் என்பதைத் தான் அறிவேன், நீதிமன்றம் அழைப்பு விடுத்தால் உண்மையைப் பகிரங்கப் படுத்தத் தயார் என்று மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயத்தில் நீதிமன்றத்துக்குச் செல்லக் கூடாது, பொலிஸுக்குச் செல்ல வேண்டும் என்று மைத்திரிபாலவிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பயங்கரவாதம் தொடர்பிலும், அரசுக்கு எதிரான செயற்பாடுகள் குறித்தும் ஏதேனும் தகவல் தெரிந்தும் அதனை உரிய தரப்புக்கு அறிவிக்காமல் மறைப்பது 10 ஆண்டு கால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரைவில் வெலிகடைச் சிறைக்குச் செல்வார்.

69 இலட்சமக்கள்பாரியஎதிர்பார்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை ஸ்தாபித்தார்கள். இலங்கை அரசியல் வரலாற்றில் கோட்டாபய ராஜபக்ஷவைப் போன்று எவரும் மக்கள் ஆணையைக் காட்டிக் கொடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான மக்கள் ஆணையை ரணில் விக்கிரமசிங்கவிடமே ஒப்படைத்து விட்டு நாட்டை விட்டுத் தப்பியோடினார் கோட்டாபய ராஜபக்ஷ.

கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடு வெறுக்கத்தக்கது. சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் 69 இலட்சம் மக்கள் ஆணையைப் பிரதிநிதித்துவப் படுத்த முடியாது. 69 இலட்சம் மக்கள் ஆணையை நாங்களே தோற்றுவித்தோம். ஆகவே, நாங்களே 69 இலட்சம் மக்கள் ஆணைக்குத் தலைமைத்துவம் வழங்குவோம்."– என்றார்.

## உண்மைகள் தெரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பில் தனக்கு உண்மை தெரியும் என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்த வெறுக்கத்தக்க பயங்கரவாதச் செயலுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை அறிய நான் உட்பட 220 இலட்சம் மக்கள் காத்திருக்கும் நிலையில், இனியும் காத்திருக்காமல் உயிர்த் தியாகம் செய்த அப்பாவி மக்களுக்காக உண்மையை வெளிப்படுத்துமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் வெளிப்படையான, பாரபட்சமற்ற மற்றும் உண்மையை வெளிப்படுத்தும், தேசிய சர்வதேச பங்குதாரர்களை ஈடுபடுத்திக் கொண்ட விசாரணை ஊடாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம்." – என்றார்.

## ஜனாதிபதி வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தம்மிக்க பெரேரா ஆகிய நால்வரில் ஒருவரே அந்த வேட்பாளராக இருப்பார் என்றும் ஊடகங்களிடம் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, "எதிரணி உறுப்பினர்கள் கோப் குழுவில் இருந்து விலகுவதால் அக்குழுவின் தலைமைப் பதவியை நான் துறக்கப்போவதில்லை. ஜனாதிபதி அல்லது ஆளுங்கட்சி கோரிக்கை விடுத்தால் பதவி விலகத் தயார்.: – என்றும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எதிராகத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு இருக்கின்றது என உறுதிப்படுத்தப்பட்டால் கோப் குழுவின் தலைவர் பதவியை அல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூடத் துறப்பதற்குத் தயார் என்றும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. சவால் விடுத்துள்ளார்.

# விபத்தில் காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு!

இரு வாரங்களுக்கு முன்னர் வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதியைச் சேர்ந்த க.கார்த்திகேசு (வயது– 73) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கடந்த 8ஆம் திகதி சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக சைக்கிளில் சென்ற வேளையில் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வீதி வளைவில் அவர் மீது மோதியது. தலையில் படுகாயமடைந்த அவர், சுயநினைவை இழந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.



அங்கும் சுயநினைவு திரும்பாததால் ஒரு வாரத்தின் பின்னர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கிருந்து சுயநினைவு திரும்பாத நிலையில் நான்கு தினங்களுக்கு முன்னர் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டார். இந்தநிலையில், நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

## உரிய சிகிச்சை வழங்காமையால் 5 வயது சிறுவன் பரிதாப மரணம்!

யாழ்ப்பாணத்தில் ஆஸ்துமாவுக்கு உரிய சிகிச்சை பெறாத சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

அராலி மத்தியைச் சேர்ந்த கிருபாகரன் சுலக்சன் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

ஆஸ்துமாவால் சிறுவன் கடந்த ஒரு வார காலமாக அவதிப்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்த்து பெற்றோர் மருந்து எடுத்துள்ளனர். ஆனாலும், அதைச் சிறுவனுக்கு வழங்கவில்லை. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை சிறுவன் நோயால் துடித்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளான்.

மரண விசாரணைகளை திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

பெற்றோர் சிறுவனுக்கு உரிய சிகிச்சையளித்திருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## 18 வயது மாணவி கடலில் மூழ்கிப் பலி

அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கி 18 வயது மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு– மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த ஆர். சுசந்திகா என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

உறவினர்களுடன் அம்பாந்தோட்டைக்குச் சுற்றுலா சென்ற மேற்படி மாணவி, கடலில் குளித்தபோதே நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார்.

அவரின் சடலம் அங்கு நின்றவர்களால் உடனே மீட்கப்பட்டது.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சடலம், அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## தாடியாலும் தலைமுடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனை புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் இந்தச் சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது வாகனத்தை இழுத்து வந்த செல்லையா திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனையை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் உற்சாகப்படுத்தி வந்தார்.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து, பதக்கத்தையும் விருதையும் பட்டயத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களால் வழங்கிவைத்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புரட்டிப் பேசுதல் ஏன்?

சீனப் பக்கம் சாய்ந்து இந்தியாவுடன் முரண்டு பிடித்து வந்த மாலைதீவின் புதிய அதிபர் முகமது மூயிஸ் திடீரென தமது சீனத் தொப்பியை புரட்டி, இந்தியப் பக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அணிய முற்பட்டிருக்கின்றார்.

'இந்தியா வெளியேறு!' என்ற கோஷத்தை கடந்த ஆண்டு இறுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது பிரதான கொள்கைப் பிரசார வாக்கியமாக முன்னிறுத்தி மாலைதீவின் புதிய அதிபராக வெற்றி வாகை சூடி இருந்தார் அவர்.

அவர் பதவியேற்ற நாள் தொடக்கம் அவரது அரசு இந்திய விரோதப் போக்கை உமிழ்ந்து கொண்டிருந்தது கண்கூடு.

மாலைதீவில் அவசர மருத்துவ உதவிப் பணியில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கும் குறைவான இந்தியப் படையினரை உடனடியாக மூடை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு நாட்டை விட்டு வெளியேற வலியுறுத்திய அவர், அதற்காகக் காலக்கெடுவும் விதித்தார்.

பதவியிலிருந்த இந்திய சார்பு ஜனாதிபதியை தோற்கடித்து, தாம் அதிகாரத்துக்கு வந்ததும் தமது சீனச் சார்புப் போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தி, அந்தப் பாதையில் வெளிப்படையாக முன்நகர்ந்தார் முகமது மூயிஸ்.

தேர்தலில் வென்று அதிகாரத்தை ஏற்றதும் பீஜிங்கிற்கே அவர் முதலில் விஜயம் செய்தார்.

இந்திய எதிர்ப்பு கொள்கையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி சீனாவுடன் கைகோர்த்தார்.

சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் செய்யும் அளவுக்கு சீன - மாலைதீவு நெருக்கம் கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் மளமளவென்று முன்னேறி இருக்கின்றது.

இந்தியாவுக்கும் மாலைதீவுக்குமான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்பட்டு, முரண்பாடு முற்றி வந்த நிலையில், "இந்தியா தங்களது நெருங்கிய நட்பு நாடு" என மாலைதீவு ஜனாதிபதி முகமது மூயிஸ் இப்போது இந்தியா தொடர்பான தமது தீவிர எதிர்ப்பு நிலைப்பாட்டில் திடீர் 'பல்டி' அடித்திருக்கின்றார்.

இந்தியாவுக்கும் மாலைதீவுக்குமான இராஜதந்திர உறவில் ஏற்பட்டுள்ள விரிசல் மாலைதீவின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டிய இந்தியாவுடனான ஹைட்ரோகிராஃபிக் ஆய்வு ஒப்பந்தத்தை இனி புதுப்பிக்கப்போவதில்லை எனவும் மாலைதீவின் புதிய அரசாங்கம் அண்மையில் அறிவித்து அழிச்சாட்டியம் பண்ணியது.

ஹைட்ரோகிராஃபிக் ஆய்வு என்பது கடல் வழிசெலுத்தல், கடல்படுக்கைகளின் முப்பரிமாண அளவீடு, அவை பற்றிய கூட்டுப் பதிவுகள், கடல் கட்டுமானம், அகழ்வாராய்ச்சி, கடல் காற்றாலைகள், கடல் எண்ணெய் ஆய்வு மற்றும் தோண்டுதல் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளை பாதிக்கும் அம்சங்களின் அளவீடு மற்றும் அவை பற்றிய விளக்கத்தின் அறிவியல் ஆகும்.

மாலைதீவும் இந்தியாவும் இணைந்து ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கூட்டாக முன்னெடுக்கும் இந்தச் செயற்பாட்டை இனிமேல் முன்னெடுக்கப்போவதில்லை என்று மாலேயின் புதிய அரசு அண்மையில் அடம் பிடித்திருந்தது.

மாலைதீவின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவது அதன் சுற்றுலாப் பயணத் துறையாகும். உல்லாசப் பயணிகளின் வருகைதான் அந்த நாட்டின் நிதி மூலவளம். அத்துறையில் அதிக எண்ணிக்கையான உல்லாசப் பயணிகளை ஆண்டுதோறும் அனுப்பி வரும் நாடு இந்தியா.

ராஜதந்திர ரீதியில் இந்தியாவோடு முரண்பட்டு, இந்தியாவை எதிரி நாடு போல மாலைதீவு கையாள முற்பட்டமையை அடுத்து, இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகை அடியோடு குறைந்து விட்டது அதனால் இதுவரை பெரும் வருவாயை ஈட்டித் தந்த உல்லாசப்பயணத்துறை அங்கு படுத்து விட்டது.

அதனால் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இக்கட்டு மாலைதீவுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

சீன ஆதரவுப் போக்கை நம்பி, இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை கையில் எடுத்துக் கையைச் சுட்டுக் கொண்டிருக்கின்றது முகமது மூயிஸின் மாலைதீவு புதிய அரசாங்கம்.

இந்தப் பிராந்தியத்தில் இந்திய எதிர்ப்பு என்ற ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்ற யதார்த்தம் புரிய ஆரம்பித்ததும் தமது 'டியூனை' மாற்றிப் புரட்டிப் போட முற்படுகின்றார் அதிபர் மூயிஸ்.

இதுவரை இந்தியாவிற்கு எதிராகவே செயற்பட்டு வந்த மூயிஸ் தற்போது "இந்தியா எங்களின் நெருங்கிய நட்பு நாடு" என தெரிவித்து, அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

மாலைதீவில் இந்தியா எண்ணிலடங்கா திட்டங்களை செயற்படுத்தியுள்ளதாகவும் அவர் புகழ்ந்துள்ளார்.

இந்த வருடத்திற்குள் மாலைதீவு 400 மில்லியன் டொலர் கடனை இந்தியாவிற்குத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில், கடன் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில், அதற்கான கால அவகாசத்தை நீடிப்பதற்கான மூயிஸின் முயற்சியே இந்தியாவைப் புகழும் இந்தப் பாசங்குத்தன நடிப்பு என இந்தியா சந்தேகிக்கின்றது.

'கடன்பட்டார் நெஞ்சம் போல' கலங்குகின்றார் மாலைதீவு அதிபர். கடன் கட்பாடுகள் மற்றும் புதிய பொருளாதார நெருக்கடிகள் அவரை இப்படிப் புரட்டிப் போட்டுப் பேசவைக்கின்றன. அவ்வளவு-தான்.

# பிலிப்பைன்ஸூ க்குச் சொந்தமான படகுகள் மீது சீனக் கப்பல் தாக்குதல்




பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சொந்தமான சிறிய படகின் மீது சீன போர்க் கப்பல்கள் தண்ணீர் பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் (23) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளான படகு பலத்த சேதம் அடைந்துள்ளது. சீனாவின் இந்த தாக்குதலுக்கு பிலிப்பைன்ஸ் இராணுவம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தென் சீனக் கடல் பகுதிக்குச் சீனா உரிமை கொண்டாடிவரும் நிலையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பிலிப்பைன்ஸ், மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளும் அதற்கு உரிமை கோரிவருவதோடு, குறிப்பாக சர்ச்சைக்கு உரிய பகுதியான இரண்டாவது தாமஸ் ஷோல் பகுதி பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் கடற்படைக்கு சொந்தமான படகுகளில் ரோந்து பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு சிறிய படகுகள் மூலம் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்லப்படுகின்ற போதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது இந்த மாதத்தில் நடைபெற்ற சீனாவின் 2 ஆவது தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவின் இரு கப்பல்களை தாக்கி அழித்துள்ளது உக்ரைன்





ரஷ்யாவின் பெரிய தரையிறங்கும் கப்பல்களான யமல் மற்றும் அசோவ், ஒரு தகவல் தொடர்பு மையம் மற்றும் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள், ஆகியவற்றை வெற்றிகரமாக தாக்கியழித்துள்ளது என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உக்ரைன் இராணுவம் வெளியிட்ட தகவலில்,

பாதுகாப்புப் படைகள், யமல் மற்றும் அசோவ் தரையிறங்கும் கப்பல்கள், ஒரு தகவல் தொடர்பு மையம் மற்றும் ரஷ்ய கருங்கடல் கடற்படைக்கு சொந்தமான பல உள்கட்டமைப்பு வசதிகளை வெற்றிகரமாக தாக்கியுள்ளன.

யமல் 1987 இல் போலந்தில் வடிவமைக்கப்பட்டது. இது 98 பேர் கொண்ட குழுவினர் பயணம் செய்வதுடன் 112.5 மீற்றர் நீளமுடையதாகும்.

அசோவ் 112 மீட்டர் நீளம் மற்றும் 87 பணியாளர்களைக் கொண்ட ஒரு பெரிய நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலாகும்.

# கிருஷ்ணகிரி தொகுதியில் வீரப்பனின் மகள் போட்டி!





இந்தியாவின் மக்களவைத் தேர்தலில், கிருஷ்ணகிரி தொகுதியில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக வீரப்பனின் மகள் வித்யா போட்டியிடப் போகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில், நாம் தமிழர் கட்சி 40 தொகுதிகளில் தனித்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் இதனை அறிவித்தார். அதில், 40 தொகுதிகளில் 20 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

20 பெண் வேட்பாளர்களில் ஒருவராக வீரப்பனின் மகள் வித்யா கிருஷ்ணகிரி தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவர் பாஜகவில் இருந்த நிலையில், கடந்த ஆண்டு நாம் தமிழர் கட்சியில் இணைந்தார். கட்சியில் சேர்ந்த சிறிது காலத்திலேயே அவருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேடையில் வேட்பாளராக வித்யா அறிவிக்கப்பட்ட போது, தொண்டர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அப்போது ஐயா வனம் காக்கப் போராடினார், இனம் காக்க நானும், என் மகளும் போராடுகிறோம் என சீமான் தெரிவித்தார்.

# ஆவணம் இல்லாது கொண்டுவரப்பட்ட தங்கம், வெள்ளி பொலிஸாரால் மீட்பு!



இந்தியாவில் இப்போது தேர்தல் காலம். கட்சிகள் தமது பக்கம் மக்களை ஈர்ப்பதற்காக நன்கொடைகளையும், பணத்தையும் அள்ளிவீசி வருகின்றனர்.

தாம் ஆட்சிக்கு வந்தால் அது செய்வோம், இது செய்வோம் எனத் தெரிவித்து வாக்காள பெரு மக்களைக் கவரும் அரசியல் கட்சிகள் பணத்தையும் இலவச அன்பளிப்புக்களை வழங்குவர்.

எனினும் இதனைத் தடுக்கத் தேர்தல் ஆணையகம் பறக்கும் படை என்ற படைப் பிரிவை உருவாக்கித் தகுந்த ஆதாரமில்லாமல் கொண்டு செல்லப்படும் பணம், நகை என்பவற்றை பறிமுதல் செய்து வருகிறது.

இவ்வாறு சிவகாசியில் இருந்து வந்த கூரியர் வாகனமும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில் சுமார் 6.3 கிலோ தங்கம் மற்றும் 2 . 7 கிலோ வெள்ளி நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்கள் பிரபல நகைக் கடைக்கு கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்பட்ட போதிலும் உரிய ஆவணங்கள் இல்லாமையால் அவை பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மத்திய மாகாண ஆசிரியர் சேவையில் 145 பேருக்கு நியமனம் வழங்கிவைப்பு

(தலவாக்கலை நிருபர்)

மத்திய மாகாணத்தில் நீண்ட கால மாக இழுபறி நிலையிலிருந்த ஆசிரியர் உதவியாளர்கள் மற்றும் தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமாக்களை நிறைவு செய்த 145 பேருக்கு மத்திய மாகாண ஆசிரியர் சேவையில் இணைத் துக்கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் விடயம் கடைசியில் நிறைவேறியது.



நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் தொலை தூர பிரதேசங்களில் ஆசிரியர் வெற்றி டங்கள் உள்ள பாடசாலைகளில் பணிபுரிய இவர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர்.

நுவரெலியா மாவட்டத்திற்கு 78 ஆசிரியர்களும், மாத்தளை மாவட்டத் திற்கு 04 ஆசிரியர்களும், கண்டி மாவட்டத்திற்கு 54 ஆசிரியர்களும், 9 தேசிய கல்வி விஞ்ஞான டிப்ளோ மாதாரர்களுக்கும் இந்நியமனக் கடிதங் கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெ லியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னருமான மருதபாண்டி ரமேஸ்வரன், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் குணதிலக்க ராஜபக்ஷ , நாடா ளுமன்ற உறுப்பினர் வேலுக்கு மார், பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுனரின் செயலாளர் திருமதி மஞ்சுல மாடப்பொல, மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக்க ஹேரத், மாகாண சபையின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.











# திருக்கோணேஸர் கொடியேற்றம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை, ஸ்ரீ மாதுமையம்பாள் உடனுறை திருக்கோணைநாத பெருமானின் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்ற திருவிழா நேற்றுக் காலை சுப நேரத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.


ஆயிரக்கணக்கான பக்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# ரணிலுக்குப் பிறந்த தினத்தில் ஆசி வேண்டி மட்டக்களப்பில் விசேட வழிபாட்டு நிகழ்வுகள்




**(பழுவூரான்)**

ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் அவருக்கு ஆசீர்வாதம் வேண்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நல்லாசி வேண்டி நேற்று மட்டக்களப்பு புளியந்திவு சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆலய பிரதம குருசிவ ஸ்ரீ பகீரத சர்மா தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

மண்முனை வடக்கு பிரதேச ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் சங்கரதாஸ் மகேந்திர ராஜாவின் ஏற்பாட்டில் ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட வழிபாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விசேட வழிபாட்டு நிகழ்வுக்கு மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமையாளரும் சமாதான நீதிவானுமான குணாலிங்க ராசா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# ரணிலின் 75 ஆவது பிறந்ததினம் வவுனியாவில் விசேட வழிபாடுகள்



**(கே.வசந்தன்)**

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. கட்சி அங்கத்தவர்களுக்கு இலவச காப்புறுதித் திட்டம் வழங்கும் நிகழ்வும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன் தலையில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 75 ஆவது பிறந்த நாளில் அவருக்கு ஆசி வேண்டியும், நாட்டின்பொருளாதார வளர்ச்சிக்காகவும் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

கந்தசாமி ஆலய பிரதம குரு தலைமையில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா அலுவலகத்தில் கட்சியின் உறுப்பினர்களுக்கு இலவச காப்புறுதி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு வன்னித் தேர்தல் தொகுதியில் 2,000 பேருக்கு இலவச காப்புறுதித்திட்டம் வழங்கப்படவுள்ளது. அதன் முதல் கட்டமாக வவுனியாவைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் 100 பேருக்கு காப்புறுதி வழங்கி வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம. மயூரதன், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் சீரடி சாயி பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலை

கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலய வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருஸ்தானத்தில், சீரடி சாயி பாபாவின் ஐம்பொன் திருவுருவச் சிலை பிரதிஷ்டை வைபவம், பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்றது.

பூஜை மற்றும் ஆகம கிரியைகளை பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த குருக்கள் மேற் கொண்டிருந்தார்.

பிரசாந்தி கொடியேற்றம் மற்றும் பாலாபிஷேகம் என்பனவும் நடை பெற்றன.










# வவுனியா பாலமோட்டைப் பிரதேசத்தில் செத்தல் மிளகாய் பதப்படுத்தல் நிலையம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சின் கீழ் 356 மில்லியன் ரூபாய் செலவில் விவசாய நவீன மயமாக்கல் வேலைத் திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தின் பாலமோட்டை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாய் பதப்படுத்தல் மற்றும் பொதியிடல் நிலையம் விவசாய பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வவுனியா வருகையோடு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.





# காசநோய் விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியா நகரில்

**(கே.வசந்தன்)**

வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில் வைத்தியசாலை பின் வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்' எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினமான நேற்று மார்ச் 24 விழிப்புணர்வு கருத்துரைகள் இடம்பெற்றமையுடன், அங்கிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகியது.

வைத்தியசாலை பின் வீதியில் ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலம் கண்டி வீதிக்குச் சென்று, அங்கிருந்து பண்டாரவன்னியன் சதுக்கத்தை அடைந்து, மன்னார் வீதி ஊடாக குருமன்காடு சந்தியை அடைந்து, ரயில் நிலைய வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து வைத்தியசாலையை சென்றடைந்தது.

இதில் காசநோய் கட்டுப்பாட்டு பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள் ஆகியோருடன் ஓட்டோக்களும் விழிப்புணர்வு பதாதைகளை தாங்கியவாறு ஊர்வலமாக வலம் வந்திருந்தன.

















# ஐக்கியப்பட்டு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலமே தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை மீளவும் வெளிப்படுத்தலாம்

## கள யதார்த்தங்களை விளக்குகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கே.வசந்தன்)

ஐக்கியப்பட்டு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி பல லட்சம் வாக்குகளை பெறுவதன் மூலமே தமிழ் தேசிய இனப் பிரச்சினை இன்னமும் இருக்கின்றது என்பதை மீள சொல்ல முடியும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாங்கள் பல்வேறு பட்ட தடைகளை தாண்டி வந்திருக்கின்றோம். எங்களுடைய ஆயுதப் போராட்டம் தொடங்கி 40 வருடங்கள் முடிந்து விட்ட நிலை. என்ன காரணத்திற்காக ஆயுதப் போராட்டம் தொடங்கியதோ அந்த நிலமை மோசமாக இன்றும் இருக்கிறது. இலங்கையில் இதுவரை வந்த ஆட்சியாளர்கள் ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பவர்களாக இதுவரை இல்லை.

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இது வரைதேனும் தீர்வு எட்டப்பட்டது என்றால் அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஒன்றுதான் எமது அரசியல் சாசனத்தில் உள்ள விடயமாக உள்ளது.

13 ஆவது திருத்தத்தில் உள்ள மாகாணசபையைக் கூட தருவதற்கு தயாரில்லை. கடந்த 6, 7 வருடங்களாக அதற்கு தேர்தலும் நடத்தப்படாத நிலை உள்ளது. மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேநேரம், இந்தவருடம் தேர்தலைப் எதிர்நோக்கும் ஒரு வருடமாகவும் இருக்கின்றது. ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆக வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஒரு சில கருத்துக்கள் உருவாகி வருகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலைகள் இருகின்றனவா? இன்று பலமான பொதுஜன பெரமுன கட்சியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை எதிர் கொள்ளத் தயாரா? 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைக் கலைப்பதை ஏற்பார்களா என்றால் அதற்கான சூழ்நிலைகள் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஆகவே, இவ்வாறான நிலையில் ஒரு ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்கும் நிலை உள்ளது.



தமிழ் மக்கள் அதனை எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதும் இங்கு இருக்கக் கூடிய கேள்வியாக வுள்ளது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் 5 கட்சிகள் கடந்த சில மாதங்களாக இவை தொடர்பான பல்வேறு பட்ட கருத்துப் பரிமாற்றங்களை செய்து வருகின்றன. இதனை எவ்வாறு கையாளலாம்? தமிழ் மக்களின் விடியலுக்காக இந்த ஜனாதிபதி தேர்தலைத் தமிழ் மக்களுக்கு சாதகமாக பயன்படுத்து தொடர்பில் பேசி வருகின்றோம். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் முயற்சித்தால் அதனை சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பது பொதுவான கருத்து.

தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள் ஓர் இணைக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்படுவார்களாக இருந்தால் தமிழ் மக்களது கோரிக்கைளைக் குறைந்தபட்சம் வெளிக் கொண்டு வர முடியும். தற்போது இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைதான் இருப்பதாகப் பேசப்படுகிறது. ஒரு தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாக தற்போது யாரும் பேசுவது கிடையாது. பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்ற கருத்தில் பேசுகிறார்கள். ஆனால் பொருளாதாரப் பிரச்சினைக்கு யுத்தமும், தேசிய இனப்பிரச்சினையும் தான் காரணம் என்பதை மறந்து போயுள்ளார்கள்.

இலங்கையில் நடந்த யுத்தத்திற்காக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ஏறத்தாழ 250 பில்லியன் (25 ஆயிரம் கோடி) அமெரிக்கா டொலர் பணத்தை இலங்கை அரசாங்கம் செலவு செய்துள்ளது எனச் சொல்லப்படுகிறது. அவற்றின் ஊடாக அல்லது அந்த விமானங்கள், செல்கள் ஊடாக ஏற்பட்ட அழிவு என்பது இன்னும் பல பில்லியன்கள் பெறுமதியானவை. பொருளாதார சீரழிவுக்கு தேசிய இனப் பிரச்சினையும், அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் யுத்தத்தை மேற்கொண்டதும் தான் காரணம். அதுதான் மூல காரணம். அதற்குத்தான் தீர்வு காண வேண்டும். அதை விடுத்து பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு என்பது இதற்கான நிரந்தர தீர்வு இல்லை.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இருந்தால் தான் முதலீடுகளை வெளிநாடுகளோ, தனிநபர்களோ மேற்கொள்வார்கள். இந்த நாட்டில் தெர்டர்ந்தும் வெடுக்குநாறிப் பிரச்சினைகளும், குருந்தூர்மலைப் பிரச்சினைகளும், புதிது புதிதாக புத்த கோவில் பிரச்சனைகளும், வடக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் பிரச்சினைகளும் தொடந்தும் நடக்குமாக இருந்தால் இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்ந்தும் இருக்காது.

ரணில் விக்கிரமசிங்க பொருளாதார ரீதியாக நாட்டை மேம்பட்ட நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நிச்சயமாக இல்லை. பொருளாதார ரீதியாக இலங்கை பெற்ற கடன்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. கடன்கள் இன்னும் பல வருடங்களுக்கு பின் தள்ளப்பட்டுள்ளன. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை. தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை கூட நடைமுறைப்படுத்த முடியாது என்கிறார்கள்.

நாங்கள் இந்த தேர்தலில் சிங்கள தலைவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டிய ஒரு செய்தி இருக்கிறது. இலங்கையில் இன்னும் தேசிய இனைப்பிரச்சுனை தீர்க்கப்படவில்லை என்பதை மீளவும் சொல்ல வேண்டியுள்ளது. அதை எவ்வாறு சொல்ல வேண்டி உள்ளது என்றால் நாங்கள் இந்த தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் மூலமும், அந்த வேட்பாளருக்கு பல லட்சம் வாக்குகளை பெற்றுக் கொடுப்பதன் ஊடாகவும் அந்த செய்தியை வழங்க முடியும்.

உங்கள் மேல் நாங்கள் நம்பிக்கை இழந்துள்ளோம், நீங்கள் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ளவேயில்லை என்ற செய்தியை சிங்கள தலைவர்களுக்கும், மக்களுக்கும் இதன் மூலம் சொல்ல முடியும். இராஜ தந்திரிகளும் அதனைப் புரிந்து கொள்வர். அதனை ஒருவர் நினைத்தால் மாத்திரம் செய்ய முடியாது.

இந்த போராட்டம் தமிழ் மக்களது இருப்புக்கான போராட்டமாக உள்ளது. நாங்கள் ஐக்கியப்பட்டு தேர்தல் விடயத்தை கையாளுவோமாக இருந்தால் எங்கள் இருப்பைக் காப்பாற்ற முடியும். நாங்கள் திடகாந்திரமாக செயற்படுவோமாக இருந்தால் சிங்கள தரப்பை சிந்திக்க வைக்க முடியும். - எனவும் தெரிவித்தார்.

# இலங்கை - இந்தியா தரைவழி இணைப்புப் பாலம் பேச்சு நடத்த சாகல புதன் புதுடில்லி செல்கின்றார்

(ந.லோகதயாளன்)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலம் அமைக்கும் திட்டம் குறித்து கலந்துரையாடல் இவ்வாரம் இடம்பெறவுள்ள நிலையில், இதில் பங்கேற்பதற்காக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை டெல்லிக்குச் செல்கிறார்.

இரு நாச்கள் டெல்லியில் தங்கியிருக்கும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க அந்நாட்டு தலைவர்களுடன் இருநாடுகளுக்கு இடையிலான பாலத்தை கட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயத்தின்போது இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைப்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.



இதன் பிரகாரம் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து, இந்தியாவின் இராமேஸ்வரம் வரையில் இந்த பாலம் அமைக்கப்படவுள்ளது.

வாகனப் போக்குவரத்துக்கு மாத்திரமன்றி, இரு வழி ரயிபாதையும் இந்த பாலத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட உள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உத்தேச பாலத்தின் ஊடான நில இணைப்பை மையப்படுத்தி, தலைமன்னார் தொடக்கம் திருகோணமலை ஊடாக கொழும்பு வரையிலான விசேட நேரடி நெடுஞ் சாலை போக்குவரத்துக் கட்டமைப்பும் உருவாக்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக தலைமன்னாரிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரையிலான வீதிக் கட்டமைபு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம், இந்தியாவுக்கு இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு செல்லும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, டெல்லியில் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார். இந்தப் பாலம் ஊடாக இரு நாட்டு பொருளாதார மேம்பாடு மற்றும் மக்கள் தொடர்புகளை வலுப்படுத்த முடியும் என்று இருதரப்புகளும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த பாலத்தை அமைப்பதற்கான பூர்வாங்க ஆய்வு நடவடிக்கைகள் யாவும் ஏற்கனவே திட்டமிடப்பட்டு அதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கல்லடி பத்திரகாளியம்மன் ஆலய தீமிதிப்பு!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய உற்சவத்தின் இறுதி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை தீமிதிப்பு வைபவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

அடியவர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு, அரோகரா கோசங்களுக்கு மத்தியில் தீமிதிப்பில் கலந்து கொண்டனர்.

இத்தீமிதிப்பில் கலந்து கொள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தந்திருந்த மையைக் காண முடிந்தது. இவ்வாலய உற்சவம் கடந்த 18 ஆம் திகதி திங்கட் கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, நேற்று இடம்பெற்ற தீமிதிப்பு மற்றும் பள்ளயச் சடங்குடன் நிறைவு பெற்றது.







# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2024




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று அபாரமான வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள் ளலாம்.

பணிகள் சுமூகமாக நடக்கும். உங்கள் பணிகளை திறம்படச் செய்வீர்கள். உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள். இன்று புதிய உறவை ஏற்படுத்திக்கொள்ள உகந்த நாள்.

சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகையாக இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்க ளின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலமாக இருக் காது. பதட்டம் நிறைந்து காணப்படும். நல்ல பலன்களைக் காண ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் செயல்திறனுக்கு மேலதி காரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதால் உறவில் மகிழ்ச்சி குறையும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும்.

சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். பயணத்திற்கென பணம் செலவு செய்வீர்கள். பதற்றம் நிறைந்து காணப்படும்.




இன்று தேவையற்ற மன வருத்தங் கள் காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. பிரார்த் தனை மற்றும் தியானங்கள் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளில் தவறுகள் நேராமல் இருக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மனதை தூ ய்மையாக வைத்திருப்பதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்கலாம்.

நிதிவளர்ச்சிக்கு சாதகமான நாளாக அமையாது. இன்று பண இழப்பு காணப்படும்இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் திறமையையும் புத்திசாலித்தனத் தையும் பயன்படுத்தி வெற்றி பெறலாம். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படும்.பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை இன்புறச் செய்வீர்கள்.வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் வர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க முடியும். உங்களின் மன நிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சுறுசுறுப்புடன் இருக்காது. பதற்றமும் தனிமையும் காணப்படும். தான தர்மம் மற்றும் தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். வெளிப்படையாக இருக்க வேண்டும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியில் ஆர்வம் குறைந்து காணப்படும். பணியிடச் சூழல் சலிப்பைத் தருவதாக இருக்கும். ஆர்வம் அதிகரிக்க புதிய யுத்திகளைக் கையாள வேண்டும்.

ஆர்வமின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். உங்கள் துணையிடம் அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும். நிதிநிலைமை இன்று சாதகமான நிலையில் காணப் படாது. பண நஷ் டம் காரணமாக நீங்கள் ஏமாற்றத்தை உணர்வீர்கள்.




உங்கள் செயல்களில் சில தாமதங் கள் காணப்படும். உங்கள் அணுகுமுறை யில் பொறுமை தேவை. கடவுள் வழிபாடு மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ பொறுமை அவசியம். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்த்தல் நல்லது.

அதிக செலவுகள் செய்ய நேரும். சேமிக்கும் வாய்ப்பும் குறைவு. ஒவ்வாமை பாதிப்புகள் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மேற் கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள் ளதால் பொறுமையோடு இருக்க வேண்டும். இன்று நன்மை தீமை இரண் டும் கலந்து காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபாவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காணப்படும். பணிச்சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. சகபணியாளர்களுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும்.

நல்லுறவிற்கு அனுசரித்துப் போதல் வேண்டும். உங்கள் துணையிடம் அத்தகைய அணுகுமுறை மேற்கொள்வது உறவில் அன்பை வளர்க்கும்.

ஆன்மீக நோக்க பயணங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். கண் எரிச்சல் காணப்படலாம். பல் வலிக்கும் வாய்ப்பு உள்ளது.




உங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தற் போதைய சூழ்நிலையில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து விடுவீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெற வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் விழிப்புணர்வுடன் ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். பதவி உயர்விற்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முயல வேண்டும். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடுகளுக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.அது உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல் திறன் காரணமாக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

பண வரவு திருப்திகரமாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க உதவும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைகாது. எதிர்பார்ப்புகளில் எம்மாற்றங்களும் குழப்பங்களும் காணப்படும். இந்தச் சூழ்நிலையை தவிர்க்க பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி நீங்கள் எதிர்ப்பார்க்கும் அளவிற்கு காணப்படாது.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஆற்றலுடன் பணியாற்ற திட்டமிடல் அவசியம்.

நீங்கள் விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும். இதனால் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும் செலவுகள் அதிகமாக காணப்படும் காரணத்தால் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. விருப்பமானவற்றை அடைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். தாமதங்களை சந்திப்பீர்கள். நல்ல விளைவுகளைப் பெறுவதற்கு பயனுள்ள முறைகளை பின்பற்றுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். உங்கள் இலக்கை அடைவதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கட்டுப்படுத்த வேண்டும். சகஜமாக நடந்து கொள்ள வேண்டும்.நட்பு முறையோடு நடந்தால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். செலவுகள் அதிகமாக காணப்படும். தேவையற்ற செலவினங்கள் காணப்பட வாய்ப்புள்ளது.

கால்களில் வலி காணப்படும். இதனால் தூக்கமின்மை பாதிப்பு காணப்படும்.




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம். விருந்து விழாக்களில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். நீங்கள் செய்யும் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று நிதிநிலையை சிறப்பாக பராமரிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபட முயற்சிக்கலாம். அது உங்களுக்கு லாபகரமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.



